# DEPOSITION OF WITNESS
## (Chapter XX III Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
## RAMANATHAPURAM
## CASE NO: C7.STC No.2208/2022
## Deposition of witness for prosecution –PW–1 (LW 1)

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| F/H Name | : | பூமிநாதன் |
| Village | : | தெய்வசிலைநல்லூர் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | படித்துக்கொண்டிருக்கிறேன் |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 19th day of June 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் பி.ஏ படித்து விட்டு தற்போது வேலைக்காக படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.5,6 வருடங்களுக்குமுன்பு நான் இருசக்கர வாகனத்தில் மது பாட்டில் வாங்க வந்தபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். யாரோ தள்ளிவிட்டார்கள் என்று நினைத்து காவல் நிலையம் சென்று சொன்னேன். அவர்கள் எழுதி வைத்துக்கொண்டு என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 14.11.2020 ம் தேதி மாலை 03.30 மணியை போல நானும் முகேஷ் கண்ணன் என்பவரும் பனைக்குளம் டாஸ்மாக் கடைக்கு சென்றுவிட்டு வரும்போது எதிரிகள் என்னை வழி மறித்து முன்விரோதம் காரணமாக கீழே கிடந்த கம்பை வைத்து தாக்கினார்கள் என்றால் சரியல்ல. அந்த வழியாக வந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும் அதன்பிறகு 3 நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்று விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி</u>**

நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றாலும் இந்த வழக்கை எனக்கு மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை என்றாலும் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.19 14:50:13 +0530